28 OCT 2011
047959
சென்னை-600 005

சுருக்கம்

பணியமைப்பு – தமிழ்நாடு நகராட்சிப் பொறியியல் பணி – உதவி செயற்பொறியாளர்களுக்கு பதவி உயர்வு வாயிலாக செயற்பொறியாளர்களாக நியமனம் செய்ய 2010–2011 மற்றும் 2011–2012–ஆம் ஆண்டிற்கான காலிப் பணியிட மதிப்பீடு – ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப.3) துறை

அரசாணை (பத்தாண்டு) எண்.408 நாள் 24.10.2011

படிக்கப்பட்டது:–

1. அரசாணை (பத்தாண்டு) எண்.249, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப.3) துறை, நாள் 21.05.2010.
2. நகராட்சி நிர்வாக ஆணையரின் நேர்முகக் கடித எண்.45475/2010/எப்.1, நாள் 01.6.2011 மற்றும் 28.07.2011.
3. அரசாணை (பத்தாண்டு) எண்.407, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப.3) துறை, நாள் 24.10.2011.

*****

ஆணை:–

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், தமிழ்நாடு நகராட்சிப் பொறியியல் பணியில், தமிழ்நாடு நகராட்சிப் பணிகளின் பொது விதிகளின் விதி 8(a)–ன்படி உதவி செயற்பொறியாளர்களுக்கு செயற்பொறியாளர்களாக தற்காலிக பதவி உயர்வு வழங்கி ஆணையிடப்பட்டது. செயற்பொறியாளர்களின் மேற்படி தற்காலிக பதவி உயர்வு மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் முறைப்படுத்தப்பட்டுள்ளது.

2. நகராட்சி நிர்வாக ஆணையர் மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட 28.07.2011 நாளிட்ட கடிதத்தில், 2011–2012–ஆம் ஆண்டிற்கான செயற்பொறியாளர்களின் பணியிடங்களை பதவி உயர்வின் வாயிலாக நியமனம் செய்வதற்கு, 2010–2011ம் ஆண்டிற்கு "வெற்றுப் பட்டியலையும்" 2011–2012–ஆம் ஆண்டிற்கு தகுதியுடைய உதவி செயற்பொறியாளர்களின் தேர்ந்த பட்டியலையும் அளித்து, அரசின் ஒப்புதல் வேண்டி செயற்குறிப்பு அளித்துள்ளார்.

3. மேற்கூறிய நிலையில், தமிழ்நாடு நகராட்சிப் பொறியியல் பணியில், 2010–2011–ஆம் ஆண்டிற்கு செயற்பொறியாளர்களின் பதவிக்கு தகுதி வாய்ந்த உதவி செயற்பொறியாளர்களின் பட்டியல் தயாரிக்கப்படாததையடுத்து, 2010–2011–ஆம் ஆண்டிற்கு "வெற்றுப் பட்டியல்" (Nil panel) வெளியிடலாமெனக் கருதி அரசு

அவ்வாறே ஆணையிடுகிறது. மேலும், தமிழ்நாடு நகராட்சிப் பொறியியல் பணியில் 2011–2012–ஆம் ஆண்டிற்கான செயற்பொறியாளர்களின் காலிப்பணியிட மதிப்பீட்டின் எண்ணிக்கை 7 (ஏழு) என நிர்ணயித்து அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ச. கருத்தையா பாண்டியன்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
நகராட்சி நிர்வாக ஆணையர், சேப்பாக்கம், சென்னை– 600 005.
அனைத்து மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்கள்.
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை, சென்னை– 600 108.
நகல்:–
மாண்புமிகு அமைச்சர் (நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி)
அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 600 009.
செயலர் அவர்களின் தனிச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும்
குடிநீர் வழங்கல் துறை, சென்னை – 600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந.2) துறை, சென்னை – 600 009.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

25.10.2011
பிரிவு அலுவலர்.
25/10/2011